# வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும் தவணைப் பரீட்சை, யூலை - 2019

FWC

**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, July - 2019**

| தரம் :- 12 (2020) | வணிகக்கல்வி - I | மூன்று மணித்தியாலம் 10 நிமிடம் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள்:-**

**சுட்டெண் :....................................**

- ***எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.***
- ***மேலே தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது சுட்டெண்ணை எழுதுக.***
- ***01 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.***
- ***16 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.***
- ***ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.***

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் 1 இற்காக | |
| வினா இல | புள்ளிகள் |
| 01 - 15 | |
| 16 - 25 | |
| மொத்தம் | |

agaram.lk

## பகுதி – I

01. தேவைகளை நிறைவு செய்யும் ஐந்து வணிகங்களின் பெயர்கள் கீழே தரப்படுகின்றன.

A. சுவையருவி குளிர்களி விற்பனை நிலையம்.

B. Bata விற்பனை நிலையம்

C. அப்பலோ (அப்பலோ) தனியார் வைத்தியசாலை.

D. ரெலிகொம் (Telecom) தொலைதொடர்பு நிறுவனம்.

E. இலங்கை போக்குவரத்து சபை

மேற்குறிப்பிட்ட வணிகங்களால் நிறைவு செய்யப்படும் மனித தேவைகளை முறையே வெளிக்காட்டும் விடைத் தொகுதியினைத் தெரிவு செய்க.

1) உணவு, பாதணி, சுகாதாரம், தொடர்பாடல், போக்குவரத்து
2) ஐஸ்கிறீம், காலணி, மருந்துகள், வலையமைப்பு வசதி, சொகுசு பேரூந்து
3) உணவு, உடை, சுகாதாரம், தொடர்பாடல், போக்குவரத்து
4) ஐஸ்கிறீம், பாதணி, சுகாதாரம், தொடர்பாடல், போக்குவரத்து
5) சர்பத், சப்பாத்து, வைத்திய பரிசோதனை, தொலைநகல், பேரூந்து (……...)

02. அகச்சூழல் காரணிகளில் காணப்படும் பலங்கள் சில கீழே தரப்படுகின்றன.

A. சரியான தீர்மானமெடுக்கும் ஆற்றல்.

B. நிதிப்பலம் அதிகமாக இருத்தல்.

C. சிறந்த மனப்பாங்கு காணப்படல்.

D. பொருத்தமானவாறு வேலைகளை பகிர்ந்தளித்தல்.

E. தேவையான தரத்துடன் காணப்படல்.

F. பொருத்தமான ஒழுங்கமைப்பு காணப்படல்.

G. பயிற்சியும், அனுபவமும் அதிகமாக இருத்தல்.

மேற்குறிப்பிட்டவற்றுள் நிறுவனக் கலாசாரத்திற்குரிய பலங்களாக காணப்படும் விடைத் தொகுதியினை தெரிவு செய்க.

1) B, C 2) D, F 3) D, G 4) B, C 5) C, D (……...)

03. நிலைபேறான அபிவிருத்தி 4R எண்ணக்கருவின் படி மீள் உருவாக்கல் (Replace) என்பதற்கான உதாரணமாக அமைவது.

1) பாவனையிலிருந்து ஒதுக்கப்படுகின்ற வாகனங்களை உடைத்து இரும்புகளாக மாற்றல்.

2) பிளாஸ்ரிக் தண்ணீர் போத்தல்களுக்கு பதிலாக சில்வர் தண்ணீர் போத்தல்களை பயன்படுத்தல்.

3) அழிவடையாத பொலித்தீன்களைப் பயன்படுத்தாதிருத்தல்.

4) பழப்பாகு உற்பத்தியில் ஈடுபடும் நிறுவனமொன்று பழப்பயிர்ச் செய்கையில் ஈடுபடல்.

5) பழைய கடதாசிகளில் இருந்து புதிய கடதாசிகளை உற்பத்தி செய்தல். (……...)

04. பின்வரும் வரி வகைகளில் நேரில் வரியாக கருதப்படுவது,

1) உற்பத்தி வரி 2) வருமான வரி 3) கம்பனி வரி

4) நிறுத்தி வைத்தல் வரி 5) மூலதன இலாபத்தின் மீதான வரி (……...)

agaram.lk

05. பின்வரும் வணிக வகைகளில் தனியார் துறைக்குரிய பொறுப்பு வரையறுக்கப்பட்ட, சட்ட ஆளுமையுள்ள தனியொருவராலும் ஆரம்பிக்கக்கூடிய வணிக அமைப்பு எது?

1) தனியுடைமை வணிகம் 2) பங்குடைமை வணிகம்

3) கூட்டுறவு 4) கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள்

5) அங்கீகார வணிகம் (……...)

06. அரச கூட்டுத்தாபனங்களின் பண்பாக கருதப்பட **முடியாதது.**

1) விசேட அல்லது பொதுச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்படல்.

2) சட்ட ரீதியான தனிமனித அந்தஸ்துக் காணப்படல்.

3) சனநாயக ரீதியான நிர்வாக முறைமை காணப்படல்.

4) பணிப்பாளர் சபையினால் நிர்வகிக்கப்படல்.

5) முழுமையான உரிமை அல்லது அதிக உரிமை அரசிற்குரியது. (……...)

07. முயற்சியாண்மையின் மூலம் முயற்சியாளர் ஒருவருக்கு கிடைக்கும் தனிப்பட்ட அனுகூலமாக கருதப்படக்கூடியது.

1) புதிய தொழில் வாய்ப்புக்கள் உருவாதல்.
2) பிரதேச வளங்களை பயன்படுத்த முடிதல்.
3) சந்தைப் பங்கு விரிவடைதல்.
4) சமூக அந்தஸ்து, மற்றும் அங்கீகாரம் அதிகரித்தல்.
5) மொத்த உள்நாட்டு வருமானம் அதிகரித்தல். (……...)

08. பின்வரும் அட்டவணையானது சிறிய மற்றும் நடுத்தரளவு வணிகங்களுக்கு ஊக்குவிப்புக்களை வழங்கும் நிறுவனங்களும், அவைகளினால் வழங்கப்படும் ஊக்குவிப்புக்களையும் எடுத்துக் காட்டுகின்றது.

| X | Y |
|---|---|
| 1. தேசிய முயற்சியாண்மை அபிவிருத்தி அதிகாரசபை. | A. சிறந்த சாதனையாளர்களுக்கான விருதுகளை வழங்கல். |
| 2. சிறிய மற்றும் நடுத்தரளவு முயற்சியாண்மை சபை | B. முயற்சியாண்மை அபிவிருத்திப் பயிற்சி வேலைத்திட்டங்களை நடத்துதல். |
| 3. கைத்தொழில் அபிவிருத்தி சபை | C. வெளிநாட்டு சந்தை வசதிகளை வழங்கல். |
| 4. இலங்கை சிறிய மற்றும் நடுத்தரளவு கைத்தொழில் சபை (SLCSMI) | D. தொழில்நுட்ப அறிவினைப் பெற்றுக் கொடுத்தல். |

ஊக்குவிப்புக்களை வழங்கும் நிறுவனங்களையும் அவைகளினால் வழங்கப்படும் ஊக்குவிப்புக்களையும் சரியாகப் பொருந்தும் விடையினைத் தெரிவு செய்க.

1) B, C, D, A 2) B, C, A, D 3) B, D, C, A
4) D, A, B, C 5) A, D, B, C (……...)

09. இலங்கை மத்திய வங்கி தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு மேற்கொள்ளும் தொழிற்பாடுக்ள சில கீழே தரப்படுகின்றன.

A. நாணயக் கொள்கை / பணக்கொள்கையினை நெறிப்படுத்தல்.
B. வங்கி, வங்கியல்லாத நிறுவனங்களின் மேற்பார்வையாளராகத் தொழிற்படல்.
C. அரசின் கடன் முகாமைத்துவத்தை மேற்கொள்ளல்.
D. வெளிநாட்டு நாணயமாற்றுக் கொள்கையினை நெறிப்படுத்தல்.
E. வெளிநாட்டு நாணயக் கட்டுப்பாட்டினை மேற்கொள்ளல்.
F. ஊழியர் நம்பிக்கை நிதியினை முகாமை செய்தல்.
G. சட்டப்பணத்தை வெளியிடலும், வழங்கலும்.

மேற்குறிப்பிட்ட தொழிற்பாடுகளில் மத்திய வங்கியின் பிரதான தொழிற்பாடுகள் எத்தனை காணப்படுகின்றது?

1) 3 2) 5 3) 6 4) 2 5) 4 (……...)

agaram.lk

10. ஏதாவது ஆதனமொன்றிற்கு சேதம் ஏற்படுமாயின் அந்த ஆதனத்தை உரிய நிலைமைக்கு கொண்டு வருவதற்கு தேவையான தொகையினை மாத்திரம் நட்டஈடாக வழங்கும் காப்புறுதித் தத்துவமாக அமைவது.
   1) காப்புறுதி செய்யும் உரிமை
   2) இழப்பீட்டுத் தத்துவம்
   3) உச்ச நம்பிக்கைத் தத்துவம்
   4) பதிலாள் வைப்புத் தத்துவம்
   5) பங்களிப்புத் தத்துவம் (……...)

11. பின்வரும் தொடர்பாடல் ஊடகங்களுள் எழுத்து மூலமான அக ரீதியான, இலத்திரனியல் அல்லாத தொடர்பாடல் முறையாகக் கருதப்படுவது,
   1) இலத்திரனியல் அறிவித்தல் பலகை, அறிக்கை.
   2) ஈமெயில் (Email), ஞாபக குறிப்பு படிவம் (மெமோ)
   3) தொலைநகல், சுவரொட்டி.
   4) கடிகாரம், பதாகை.
   5) ஞாபகக் குறிப்பு (மெமோ) படிவம், அறிவித்தல் பலகை. (……...)

12. போக்குவரத்து முறையில் ஒரு சமமான அபிவிருத்திக்கு அவசியமாக அமைவது,
   1) வேகம் கூடிய, பாதுகாப்பு மிகுந்த போக்குவரத்து சாதனங்களை பயன்படுத்தல்.
   2) பெருந்தெருக்கள், அதிவேக பாதைகள், நீர் வழிப்போக்குவரத்தினை அபிவிருத்தி செய்தல்.
   3) பாதைகள், தரிப்பிடங்கள், ஊடகங்கள், சக்தி (வலு) ஆகியவற்றில் அபிவிருத்தியினை மேற்கொள்ளல்.
   4) துறைமுகங்கள், விமான நிலையங்கள், பேரூந்து மற்றும் புகையிரத தரிப்பிடங்களை அபிவிருத்தி செய்தல்.
   5) நவீன ரக பேரூந்துகள், புகையிரதங்கள், விமானங்கள் மற்றும் கப்பல்களை உபயோகித்தல். (……...)

agaram.lk

13. பின்வருவனவற்றுள் சரியான கூற்றினைத் தெரிவு செய்க.
   1) கொள்வனவாளருக்கும், விற்பனையாளருக்குமிடையே உற்பத்திப் பொருட்கள் சேவைகள் உரிமை மாற்றம் செய்யும் செயல் முறை வர்த்தகம் எனப்படும்.
   2) முதல்வரின் சார்பாக பொருட்களை கொள்வனவு செய்யும் பொழுது அல்லது விற்பனை செய்யும் பொழுது அக்கொடுக்கல் வாங்கல்களை தனது தனிப்பட்ட பெயரில் மேற்கொள்ளப்படும் முகவர் காரணிகர் ஆவார்.
   3) இறுதி நுகர்வோருக்கு பொருட்களை விற்பனை செய்தல் மொத்த வியாபாரம் எனப்படும்.
   4) வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை நாட்டிற்குள் கொண்டு வராது, துறைமுகத்தினுள் மீள ஒழுங்குபடுத்தி அல்லது ஒழுங்குபடுத்தாமல் மீள இன்னுமொரு நாட்டிற்கு ஏற்றுமதி செய்தல் மீள் ஏற்றுமதி வியாபாரம் எனப்படும்.
   5) சிலவகைப்பொருட்களை இறக்குமதி செய்யும் பொழுது சுங்கத் திணைக்களத்தில் அனுமதி பெறல் வேண்டும். (……...)

14. மொத்த வியாபாரம், சில்லறை வியாபாரம் என்பவற்றின் பண்புகள் சில கீழே தரப்படுகின்றன.

A. வியாபாரக் கழிவுகளை வழங்கல்.

B. பல்வேறு வகையான பொருட்கள் விற்பனை செய்யப்படல்.

C. சந்தை தொடர்பான ஆய்வுகள் செய்தல்.

D. மீள் விற்பனை நோக்கில் பொருள் கொள்வனவு செய்தல்.

E. நுகர்வோருடன் நெருங்கிய தொடர்பினைப் பேணல்.

F. இறுதி நுகர்விற்காக பொருட்களை விற்பனை செய்தல்.

மேற்குறிப்பிட்டவற்றுள் மொத்த வியாபாரத்தின் பண்புகளை மட்டும் எடுத்துக்காட்டும் விடையினைத் தெரிவு செய்க.

1) B, E, F 2) A, B, E 3) A, B, C 4) B, C, D 5) A, C, D (……...)

15. இலத்திரனியல் வியாபாரம் தொடர்பான பின்வரும் அனுகூலங்களுள் வணிகத்துக்கு மட்டும் பொருந்தக்கூடிய அனுகூலமாக அமைவது,

1) சந்தைப்பங்கினை விரிவாக்க முடிதல்.

2) கொடுக்கல், வாங்கல்களை விரைவாக மேற்கொள்ள முடிதல்.

3) போக்குவரத்தின் இலகுதன்மை.

4) சந்தைத் தகவல்களை பெறமுடிதல்.

5) ஒப்பீட்டளவில் பொருட்களின் விலை குறைவாகக் காணப்படல். (……...)

❖ **16 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிப்பதற்காகப் பொருத்தமான சொற்களைக் கொண்டு வெற்றிடங்களை நிரப்புக.**

16. அ) வலையமைப்பினூடாகக் கொள்வனவு, விற்பனை நடவடிக்கைகள் இடம்பெறுவது ………………………… எனப்படுவதோடு, வணிகத்திற்குரிய அனைத்து நடவடிக்கைகளும் வலையமைப்பினூடாக மேற்கொள்ளப்படுவது ….……………………………. எனப்படும்.

ஆ) உற்பத்தியின் தன்மைக்கேற்ப வணிகங்களை வகைப்படுத்தும் போது இரண்டாம் நிலைக்குள் (1) ……………………. (2) ……………………… உள்ளடக்கப்படுகின்றது.

17. அரசு வணிகங்களில் செல்வாக்குச் செலுத்தும் முறைகள் சில கீழே தரப்படுகின்றன. அம் முறைகளுக்கு பொருத்தமான உதாரணங்கள் ஒன்று வீதம் இடைவெளியில் குறிப்பிடுக.

அ) உட்கட்டமைப்பு வசதி வழங்கல் ……………………………………………………...

ஆ) போட்டியாளராக செயற்படல் ……………………………………………………...

இ) கொள்கைகளை உருவாக்கல் ……………………………………………………...

ஈ) சட்டதிட்டங்களை உருவாக்கல் ……………………………………………………...

18. பின்வரும் கூற்றுக்கள் உண்மையா? பொய்யா என்பதை அவற்றுக்கு எதிரேயுள்ள இடைவெளியில் குறிப்பிடுக.

அ) எந்தவொரு கூட்டிணைக்கப்பட்ட கம்பனியும் பொதுமக்களுக்கு பங்குகளை வழங்கி மூலதனத்தை திரட்டிக் கொள்ள முடியும்.

(………………)

agaram.lk

ஆ) முயற்சியாண்மை செயன்முறையின் படிமுறைகளில் முதலாவது படிமுறையாக கண்டுபிடிப்புக்கள் (Discovery) (புத்தாக்கம் புனைதல்) காணப்படுகின்றது.

(……………….)

இ) சிற்றளவு வணிகர்களுக்கு கடன் வழங்குவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி அனுசரணையின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் கடன் திட்டம் சஹன்யா என்பதாகும்.

(……………….)

ஈ) வணிக வங்கிகளில் காணப்படுகின்ற பொதுமக்களின் நிலையான சேமிப்பு வைப்புக்கள், திறைசேரி உண்டியல்கள், வணிகப்பத்திரங்கள் என்பன வங்கிப்பணம் ஆகும்.

(……………….)

19. அ) காசோலையில் அச்சிடப்பட்டுள்ள “அல்லது கொண்டு வருபவருக்கு” என்ற சொல் வெட்டப்படாது விடப்பட்டுள்ள காசோலை ……………..…………………. எனப்படுவதுடன் காசோலை சட்ட ரீதியாக உரிமை மாற்றம் செய்யப்பட்டது என்பது ………………………. மூலமே உறுதிப்படுத்தப்படுகின்றது.

ஆ) காப்புறுதிக் கம்பனியொன்றினால் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற காப்புறுதி இடரொன்றை அந்நிறுவனம் வேறு ஒரு காப்புறுதி நிறுவனத்தில் அல்லது பலவற்றில் காப்புறுதி செய்தல் ………………………………….. எனப்படும்.

20. சர்வதேச வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் ஆவணங்கள் வழங்கப்படுவதற்கான நோக்கங்கள் சில கீழே தரப்படுகின்றன. அந்நோக்கங்களுக்கு பொருத்தமான ஆவணத்தை இடைவெளியில் குறிப்பிடுக.

அ) சில வகையான விவசாய உற்பத்தி பொருட்களின் பாவனை பொருத்தப்பாட்டினை உறுதிப்படுத்தி அந்நாட்டிலுள்ள ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் ஆவணம்……………………….

ஆ) கப்பலுக்கு ஏற்றப்பட்ட பொருட்கள் நல்ல நிலையில் காணப்படும் போது வழங்கப்படும் ஆவணம்…………………………………………..

இ) சுங்கத்திற்கு பொருட்கள் ஒப்படைக்கப்பட்டதன் பின்னர் அப்பொருள்கள் பொறுப்பேற்கப்பட்டது எனக் குறிப்பிட்டு சுங்கத்தினால் ஏற்றுமதியாளருக்கு வழங்கப்படும் ஆவணம்……………………………………………..

ஈ) கப்பலிலேற்றப்பட்ட பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படும் நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட்டது என உறுதிப்படுத்தப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட வணிக கழகத்தினால் அல்லது அரச நிறுவனமொன்றினால் வழங்கப்படும் ஆவணம்………………………………

agaram.lk

❖ ***21 தொடக்கம் 25 வரையுள்ள வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடைகளை எழுதுக.***

21. வணிகப் பரம்பலின் முக்கியமான சந்தர்ப்பங்கள் நான்கினையும் குறிப்பிடுக.

1) ……………………………………………

2) ……………………………………………

3) ……………………………………………

4) ……………………………………………

22. பங்குடைமை வணிகமொன்றில் கட்டாயமாக இருக்க வேண்டிய பண்புகள் நான்கினைத் தருக.

1) ……………………………………………

2) ……………………………………………

3) ……………………………………………

4) ……………………………………………

23. இலத்திரனியல் பணத்தினூடாக கொடுக்கல் வாங்கல்களை தீர்க்கும் போது தொடர்புபடும் நான்கு கட்சியினரைக் குறிப்பிடுக.

1) ……………………………………………

2) ……………………………………………

3) ……………………………………………

4) ……………………………………………

24. உற்பத்திச் செயன்முறைகள் பூர்த்தியாக்கப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து உற்பத்திப் பொருள் அல்லது குறித்த தகவல்கள் இறுதி நுகர்வோனுக்கு வழங்கும் வரையிலான அசைவுகளில் சம்பந்தப்படும் (Out bound Logistic) தரப்பினர் நால்வரைக் குறிப்பிடுக.

agaram.lk

1) ……………………………………………

2) ……………………………………………

3) ……………………………………………

4) ……………………………………………

25. வெளிநாட்டு வியாபாரத்தின் வகைகளைக் குறிப்பிடுக.

1) ……………………………………………

2) ……………………………………………

3) ……………………………………………

4) ……………………………………………

(25X2=50 புள்ளிகள்)

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, யூலை - 2019**

FWC

**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, July - 2019**

| தரம் :- 12 (2020) | வணிகக்கல்வி - II | |
|---|---|---|

## பகுதி II

❖ ***அறிவுறுத்தல்கள்***
**ஒவ்வொரு பகுதியில் இருந்தும் ஆகக்குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து (05) வினாக்களுக்கு விடை தருக.**

## பகுதி – I

*01.*

1) ஆதவன் சிறிய அளவான பண்ணையை நடாத்தி வரும் ஒரு விவசாயியாகும். அவர் தனது பண்ணையில் தானியங்கள் காய்கறி, பழ வகை என்பவற்றை பயிரிட்டு வருகின்றார். தான் செய்யும் உற்பத்தியில் ஒரு பகுதியை தனது குடும்ப நுகர்வுக்கு பயன்படுத்துவதுடன் மிகைகள் யாவற்றையும் சில்லறை வியாபார நிலையங்களுக்கும், பிரதான சந்தைகளுக்கும் சிறியரக வாகனம் ஒன்றின் உதவியுடன் விற்பனை செய்கின்றார்.
மேற்படி நிகழ்விலிருந்து உதாரணங்களைக் காட்டி பின்வரும் எண்ணக்கருக்களை விளக்குக.
1. நேர் உற்பத்தி  2. நேரில் உற்பத்தி
3. முதலாம் நிலை உற்பத்தி  4. மூன்றாம் நிலை உற்பத்தி
(2 புள்ளிகள்)

2) சக்தி என்பவர் அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கட்டிட ஒப்பந்த நிறுவனம் ஒன்றை தனது நண்பனான கரனை முகாமையாளராக நியமித்து, பத்து ஊழியரின் உதவியுடன் வெற்றிகரமாக நடாத்தி வருகின்றார். இவரது வணிகத்தில் அக்கறை செலுத்தும் தரப்பினர் நால்வரைக் குறிப்பிடுக.
(2 புள்ளிகள்)

agaram.lk

3) ஆடைத் தொழிற்சாலையொன்றில் இடம்பெறும் வணிகக் கருமங்களுக்கான உதாரணங்கள் சில கீழே தரப்படுகின்றன.
A. ஆடைத் தொழிலாளர்களின் கோவைகளைத் தயாரித்தல்.
B. தைத்த ஆடைகளுக்கு விளம்பரங்களை மேற்கொள்ளல்.
C. தகவல்களை இற்றைப்படுத்தல்.
D. உற்பத்திக் கிரயத்தினை இழிவுபடுத்துவதற்கான முறைகளை தேடியறிதல்.
மேற்படி உதாரணங்களுக்குப் பொருத்தமான வணிகக் கருமங்களை பெயரிடுக.
(2 புள்ளிகள்)

4) கீழே காணப்படும் பேரினச்சூழல் சக்திகள் வணிகக் கருமங்களில் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றது என விளக்குக.
அ) சமூக கலாசாரச் சூழல்
ஆ) மக்கட் சூழல்
(2 புள்ளிகள்)

5) வணிகமொன்றின் அண்மிய சூழல் காரணிகளைப் பெயரிடுக.
(2 புள்ளிகள்)

*02.*

1) ஒழுக்க நெறிக்கோவை (Code of ethics) யை எழுத்தில் வைத்துக் கொள்ளவும், அதனை செயற்படுத்தவும் வணிகங்கள் முயற்சிப்பதற்கான காரணங்கள் எவை?
(2 புள்ளிகள்)

2) வவுனியாவில் இயங்கும் பிரபல தனியார் வங்கியொன்று தனது இலாபத்தில் குறிப்பிட்ட சதவீதத்தினை ஒதுக்கி பின்தங்கிய வறுமை நிலையிலுள்ள உயர்தரம் கல்வி கற்கும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் திட்டம் ஒன்றை செயற்படுத்தி வருகின்றது.
மேற்படி சமூகப் பொறுப்பினை குறிப்பிட்ட தனியார் வங்கி செயற்படுத்துவதன் மூலம் அந்நிறுவனத்தில் அக்கறை கொள்ளும் பின்வரும் தரப்பினருக்கு கிடைக்கும் அனுகூலங்கள் இரண்டு வீதம் குறிப்பிடுக.
அ) ஊழியர்
ஆ) உரிமையாளர் (பங்குதாரர்க்கு)

(2 புள்ளிகள்)

3) இலங்கை அரசு அடிக்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக வருடந்தோறும் பெருந்தொகையை செலவு செய்கின்றது. இவ்வாறான அபிவிருத்தி நடவடிக்கைகள் வணிகங்களுக்கு எவ்வாறு உதவிபுரிகின்றது என்பதை விளக்குக.

(2 புள்ளிகள்)

4) அ) பேரினப் பொருளாதார நிலைப்புத்தன்மையைப் பாதுகாப்பதே அரசின் இறைக்கொள்கையின் நோக்கமாகக் காணப்படுகின்றது. இவ்வாறான இறைக் கொள்கையானது வணிக நடவடிக்கைகளில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் முறைக்கு இரண்டு உதாரணம் தருக.

ஆ) மூலதனச் செலவு என்பதனால் கருதப்படுவது யாது?

(2 புள்ளிகள்)

5) அ) இலங்கையில் நுகர்வோர் பாதுகாப்பிற்காகத் தொழிற்படுகின்ற அரச நிறுவனங்களின் பெயர்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

ஆ) ரதன் என்பவர் உள்ளூரில் பழவகைகளை சேகரித்து பழப்பாகு உற்பத்தியில் ஈடுபடுகின்றார். பழப்பாகு உற்பத்திப் பொருட்களுக்கு SLS (இலங்கை தரச்சான்றிதழ்) சான்றிதழ் கட்டாயமாக்கப்பட்டுள்ளமையால் ரதன் அதனை பெறுவதற்கான முயற்சியில் ஈடுபடுகின்றார். தரச் சான்றிதழை (SLS) பெறுவதனால் ரதன் பெற்றுக் கொள்ளும் நன்மைகள் இரண்டு தருக.

(2 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

agaram.lk

03.

1) தனது தாயாரால் நீண்டகாலமாக நடாத்தி வரப்பட்ட உள்ளூர் உற்பத்திப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட உணவு வகைகளை விற்பனை செய்யும் வணிகத்தை சித்ரா என்பவர் கையேற்றுக்கொண்டார். அவ்வணிகத்திற்கு சில நவீனமயப்படுத்தல்களை அறிமுகப்படுத்தியதுடன் உணவு வகைகளுக்கேற்ப வெவ்வேறு பிரிவுகளை உருவாக்கினாள் அவரது விற்பனையும், இலாபமும் அதிகரித்துக் கொண்டிருந்த வேளை மேற்பார்வை செய்வது தொடர்பான சித்ராவின் அக்கறையற்ற நடவடிக்கையின் காரணத்தினால் அவ்வணிகமானது படிப்படியாக நட்டமடையத் தொடங்கியது. இவற்றின் விளைவாக முகாமை மற்றும் நிதி தொடர்பான பிரச்சினைகள் தோன்றியதுடன் முடிவில் சித்ரா கடன் தீர்க்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டாள்.
அ) மேலே தரப்பட்ட தகவல்களின் பிரகாரம் சித்ராவின் வணிக நிறுவனம் எவ்வகையானது?
ஆ) சித்ராவின் வணிகத்தை உதாரணமாகக் கொண்டு "வரையறுக்கப்படாத பொறுப்பு" என்பதனால் கருதப்படுவது யாது? என்பதை விளக்குக.

(2 புள்ளிகள்)

2) குமணன் என்பவர் நீடித்த வாழ்வுடைய, அதிக மூலதனத்தைத் திரட்டக்கூடிய, நட்டப்பொறுப்பு வரையறுக்கப்பட்ட வணிக அமைப்பினை ஆரம்பிப்பது தொடர்பாக வணிகக் கல்வி கற்ற மாணவன் என்ற வகையில் உம்மிடம் ஆலோசனையை வேண்டி நிற்கின்றார்.

அ) குமணன் ஆரம்பிக்கக்கூடிய வணிக அமைப்பினைக் குறிப்பிடுக.

ஆ) மேற்படி வணிக அமைப்பினை பதிவு செய்ய வேண்டுமாயின் பதிவு செய்ய வேண்டிய சட்டத்தையும் பதிவு செய்ய வேண்டிய இடத்தினையும் குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

3) கூட்டுறவு வணிகமொன்றின் விஷேட பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

4) அ) அங்கீகார வணிகத்துடன் தொடர்புடைய இரு பிரதான பிரிவினர்களைக் குறிப்பிடுக.
ஆ) உள்ளூராட்சி நிறுவனங்களின் கீழ் காணப்படும் நிறுவனங்களின் பண்புகள் இரண்டு தருக.

(2 புள்ளிகள்)

5) கார்த்திக் என்பவர் தான் வசிக்கும் பிரதேசத்தில் இலகுவாகக் கிடைக்கும் தேங்காய் மட்டைகளை பயன்படுத்தி தும்பு உற்பத்தியினை பத்து ஊழியரை நியமித்து மேற்கொண்டு வருகின்றார். இவர் தனது தும்பு உற்பத்தி தொடர்பாக புதுமையான விடயங்களை காலத்திற்குக் காலம் பொருத்தமான விதத்தில் உடனடியாக அறிமுகம் செய்வதனால் இவரின் பொருளுக்கான கேள்வி மற்றும் இலாபம் அதிகரித்தது.
மேற்படி சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு கார்த்திக்கின் முயற்சியாண்மைக்கும், பொருளாதார விருத்திக்கும் இடையிலான தொடர்பினை விளக்குக.

(2 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

## பகுதி II

04.

1) சிறு வணிகத்தை ஆரம்பித்து சிறிய காலத்தின் பின்னர் அவற்றுள் பெரும்பாலானவை மூடப்படுகின்றன. இத்தகைய நிலைமை இருப்பதற்கான காரணங்களைக் குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

2) அ) சிறிய மற்றும் நடுத்தரளவு வணிகங்களை ஊக்குவிப்பதற்கு அரசினால் வழங்கப்படும் நிதி சார்ந்த ஊக்குவிப்புக்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

(1 புள்ளி)

ஆ) சிறிய மற்றும் நடுத்தரளவு வணிகங்களுக்கு ஊக்குவிப்புக்களை வழங்கும் அரச நிறுவனங்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

(1 புள்ளி)

3) நல்ல பணத்திற்கு இருக்க வேண்டிய பண்புகளை இலங்கையில் பாவனையிலுள்ள சட்டப்பணத்தை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.

(2 புள்ளிகள்)

agaram.lk

4) அ) உத்தரவு பெற்ற வணிக வங்கியிலிருந்து உத்தரவு பெற்ற விசேட வங்கியானது எவ்வாறு வேறுபடுகின்றது?
ஆ) அலகுப் பொறுப்பு நிதியம் என்பதனால் கருதப்படுவது யாது?

(2 புள்ளிகள்)

5) அ) வணிகவங்கிகள் வாடிக்கையாளரின் தேவைகளின் போது வாடிக்கையாளர்கள் சார்பாக பிரதிநிதியொருவர் எனும் வகையில் பிரதிகர்த்தா சேவையாற்றுகின்றது. அவ்வாறான சேவைகள் இரண்டினைக் குறிப்பிடுக.
ஆ) தன்னியக்க வங்கிச் சேவைகள் மூலம் வாடிக்கையாளருக்கு கிடைக்கும் நன்மைகள் இரண்டு தருக.

(2 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

05.

1) அ) சர்வதேச ரீதியில் வங்கிகளுக்கிடையில் இடம்பெறுகின்ற நிதிப்பரிமாற்றங்கள் தொடர்பில் கருமமாற்றுகின்ற தொடர்பாடல் வலையமைப்பின் பெயரினைக் குறிப்பிடுக.
ஆ) வணிக வங்கிகளினால் வழங்கப்படும் கடன் தொடர்பான சேவைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

(1 புள்ளி)

2) அ) சிவா என்பவருக்கு ராகுல் என்பவர் ரூ 100 000 செலுத்த வேண்டியுள்ளது. ராகுலிற்கு இலங்கை வங்கி முள்ளியவளை கிளையிலும், சிவா என்பவருக்கு மக்கள் வங்கி, கொக்குவில் கிளையிலும் நடைமுறைக் கணக்கு உள்ளது. மேற் குறிப்பிட்ட தொகையினை அதி உயர் பாதுகாப்பு மிகுந்த குறுக்கு கோடிடல் மூலம் காசோலை ஒன்றினை ராகுல் வழங்க எண்ணியுள்ளாரெனின் அவர் எவ்வாறான குறுக்குக் கோடிடலினை மேற்கொள்ள வேண்டுமென வரைந்து காட்டுக. (1 புள்ளி)

ஆ) காசோலையொன்றில் புறக்குறிப்பிடல் தேவைப்படுகின்ற சந்தர்ப்பங்கள் இரண்டு தருக.
(1 புள்ளி)

3) அ) தீ மற்றும் வெடிக்கக்கூடிய பொருள்கள் என்பவற்றினால் பாதுகாப்புப் பெறக்கூடிய காப்புறுதி ஒப்பந்தமொன்றை பெற்றிருந்த குமரனின் வணிகமானது தீவிரவாதிகளின் செயற்பாடு காரணமாக சேதத்திற்குள்ளானது. இதற்கான இழப்பீட்டினை குமரன் காப்புறுதி நிறுவனத்திடம் கோரிய போது இழப்பீட்டினை வழங்க மறுத்தது. இதற்கு காரணமாக அமையும் காப்புறுதித் தத்துவத்தினைக் குறிப்பிடுக.
(1 புள்ளி)

ஆ) பொறுப்புக் காப்புறுதியின் கீழ் பெற்றுக் கொள்ளக்கூடிய பொறுப்புக் காப்புறுதி ஒப்பந்த வகைகள் இரண்டு தருக.
(1 புள்ளி)

4) வினைதிறன் (Efficiency) கொண்ட தொடர்பாடலொன்றில் காணப்படும் தடைகள் நான்கு தருக.

5) மிதுரா என்பவர் புலமைப்பரிசில் ஒன்றினை பெற்று இந்தியா சென்று பாடநெறி ஒன்றைத் தொடர தனது ஊரான அச்சுவேலியிலிருந்து பேரூந்து மூலம் பயணம் செய்து, யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தை வந்தடைந்து அங்கிருந்து புகையிரதம் மூலம் கொழும்பு சென்று அங்கிருந்து தனியார் மோட்டார் வாகனம் ஒன்றின் உதவியுடன் பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் சென்று விமானம் மூலம் இந்தியா சென்றடைந்தார்.

அ) மிதுரா பயன்படுத்திய போக்குவரத்தின் அடிப்படை அம்சங்களைக் குறிப்பிட்டு, அவற்றிற்கு சம்பவத்திலிருந்து உதாரணம் தருக.

ஆ) மிதுரா பயன்படுத்திய போக்குவரத்து முறைகளில் தாராளத்தன்மை வாய்ந்த தேவையான எந்நேரத்திலும் பெறக்கூடிய போக்குவரத்து முறை எது?
(2 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

06.

1) அ) களஞ்சிய சாலையொன்றில் பொருள்களை இடம்மாற்றுவதற்கும், ஒழுங்கு முறையாக பொருள்களை கையாள்வதற்கும் உபகரணங்களை பயன்படுத்துவதனால் பெற்றுக்கொள்ளக்கூடிய அனுகூலங்கள் இரண்டு தருக.
(1 புள்ளி)

ஆ) நிறுவனங்களின் தன்மை, உற்பத்திகளின் தன்மை என்பவற்றிற்கமைய பல்வேறுபட்ட வகையிலான போக்குவரத்து, வழங்கல் சேவை முறைமை காணப்படலாம். அதற்கேற்ப உற்பத்திப் பொருட்களை விநியோகித்த பின்னர் மீள் பாய்ச்சலுடன் கூடிய முறைமைக்கு (Reverse Logistics systems நேர்மாற்று அமையவியல் முறை) உதாரணம் இரண்டு தருக.
(1 புள்ளி)

2) கடந்த காலங்களில் நகரங்களில் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்த சிறப்பு வியாபார நிறுவனங்கள் தற்போது கிராமப் பகுதிகளிலும் பரவலடைந்து காணப்படுகின்றது. இவ்வாறு சிறப்பு வியாபார நிறுவனங்கள் பிரபல்யமடைவதற்கான காரணங்கள் நான்கு தருக.
(2 புள்ளிகள்)

3) அ) வெளிநாட்டு வியாபாரத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ள காரணிகள் இரண்டு தருக.
(1 புள்ளி)

ஆ) வியாபார வலயம் (Trade bloc) என்பதனால் கருதப்படுவது யாது?
(1 புள்ளி)

4) வெளிநாட்டு வியாபாரத்தின் நவீன போக்குகள் நான்கு தருக.
(2 புள்ளிகள்)

5) இலத்திரனியல் வணிகம் நடைபெறும் முறையினை படிமுறை ஒழுங்கில் தருக.
(2 புள்ளிகள்)

agaram.lk